1972 நவம்பர் 14]

Scheme for the Exploration of Ground Water

* 299 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have sent any Scheme for the country-wide exploration of Ground Water Resources to the Union Government; and

(*b*) if so, the details thereof?

ஊற்று நீர்வளத்தைக் கண்டுபிடிக்கும் திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலம் முழுவதுமான ஊற்று நீர்வளத்தைக் கண்டுபிடிப்பதற்கான திட்டம் எதையாவது மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) உலக வங்கி அளித்த கருத்துரையின் பேரில் தமிழ்நாட்டிலுள்ள கடினப் பாறைப் பகுதிகளில் நில நீர்வள ஆய்வுகள் நடத்துவதற்காக மூன்று வல்லுநர்களை வரவழைப்பதன் மூலம் 1,76,000 டாலர் மதிப்புக்கான ஐக்கிய நாடுகளின் உதவி கோரும் திட்டம் ஒன்று 1971, ஜூலையில் இந்திய அரசின் மூலமாக, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்திய அரசிடமிருந்து இறுதி மறுமொழி இன்னும் எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள கடினப் பாறைப் பகுதிகளில் நிலநீர்வள ஆய்வு நடத்துதல் குறித்து "நாட்டுத் திட்டத்தின்" கீழ் வல்லுநர்கள், சாதனங்கள், ஆராய்ச்சிப் பணி உதவித் தொகைகள் வடிவில் 20 லட்சம் டாலர் அளவுக்கு ஐக்கிய நாடுகள் உதவி கோரும் இன்னொரு திட்டம் 1971 அக்டோபரில் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இருப்பினும், இத்திட்டம் மிகவும் வரையறைக் குட்பட்ட தன்மையுடையதெனவும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் கூடிய நில நீர்வள ஆய்வுத் திட்டம் தமிழ்நாட்டில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் காரணம் காட்டி இத்திட்டத்தை இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS